# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற் பயிற்சி நிறுவகச் சட்டம்

---

*[1984, சனவரி மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, சனவரி மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 1.00** **தபாற் செலவு : சதம் 90**

# 1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற் பயிற்சி நிறுவகச் சட்டம்

[1984, சனவரி மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.— ஒ. 86/80

**உடுதுணித் தொழிற் பயிற்சி நிறுவகமொன்றைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்வினவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற் பயிற்சி நிறுவகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்*

## பாகம் I

### உடுதுணித் தொழிற் பயிற்சி நிறுவகத்தைத் தாபித்தல்

**2.** (1) " உடுதுணித் தொழிற் பயிற்சி நிறுவகம் " என அழைக்கப்படுவதான (இது, இதனகத்துப்பின்னர் " நிறுவகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது 6 ஆம் பிரிவின் கீழ் அப்போதைக்கு அந்நிறுவகத்தின் உறுப்பினர்களாகவுள்ள ஆட்களைக்கொண்டிருத் தலும் வேண்டும். *உடுதுணித் தொழிற் பயிற்சி நிறுவகத்தைத் தாபித்தல்.*

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித் தொதுக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் என்பதுடன், இடையறுவழியுரிமையையும், ஒரு பொது இலச்சினையையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன், அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**3.** எந்தக் குறிக்கோள்களுக்காக நிறுவகமானது தாபிக்கப் பட்டதோ அந்தக் குறிக்கோள்கள், முதற்படியாக உடுதுணித் தொழிலுக்குள் தொழினுட்ப, முகாமைத்துவத் திறன்களின் மேம் பாடும், அபிவிருத்தியும் நோக்கி நெறிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக— *நிறுவகத்தின் குறிக்கோள்கள்.*

(அ) உடுதுணித் தொழிலும் உடுதுணி உற்பத்திக் கற்கைத் துறைகளும் தொடர்பான பயிற்சி வசதிகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்பாடுசெய்தல் மூலம் அல்லது நடைமுறைப்படுத்தல் மூலம் வேலையாட்களினதும், நிறைவேற்றுநர்களினதும் உயர்தொழில் திறமையை மேம்படுத்தலும் அது தொடர்பாக சான்றிதழ்கள், டிப்புளோமாக்கள், பட்டங்கள், பரிசுகள் ஆகியவற்றை வழங்குதல் ;

(ஆ) உடுதுணித் தொழில் சம்பந்தமான கற்கைநெறிகளைப்பேணி நடாத்தலும் அவற்றிற்கு உதவுதலும் ;

(இ) உடுதுணித் தொழிலில் உள்ள தொழிற் பிரிவுகளுக்குத் தொழிநுட்ப, பொருளாதார ஆலோசனைச் சேவைகளை அளித்தல் ;

(ஈ) உடுதுணித் தொழிலுடன் தொடர்பான மாநாடுகளுக்கும், கருத்தரங்குகளுக்கும் ஆதரவளித்தலும் அவற்றை நடாத்திவைத்தலும் ; அத்துடன், அவை சம்பந்தமான வெளியீடுகளையும், சஞ்சிகைகளையும் வெளியிடுதலும் ;

(உ) உடுதுணி உற்பத்தித் துறையில் அதனையொத்த இயல்புடைய வேறு நிறுவகங்களுடன் ஒத்துழைத்தல் ; அத்துடன்

(ஊ) தொழிற் பிரிவுகளின் குறிப்பான தொழினுட்ப பிரச்சினைகளை ஆராய்ந்து, அவசியமான வழிகாட்டுகையையும், மதியுரையையும் அளித்தல்.

**நிறுவகத்தின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.**

**4.** நிறுவகமானது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நியாயமானளவு அவசியமான அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றலும் வேண்டுமென்பதுடன், குறிப்பாக—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், வைத்திருக்கலாம், அல்லது குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கலாம், அல்லது கொடுக்கலாம், ஈடு வைக்கலாம், அடகு வைக்கலாம், விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம் ;

(ஆ) உடுதுணித் தொழிலுடன் தொடர்பான கூறுப் பயிற்சி நிலையங்களையும் முன்னோடிக் கருத்திட்டங்களையும் கொள்ளலாம், தாபிக்கலாம், நிறுவலாம், அத்துடன் செயற்படுத்தலாம் ;

(இ) நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவையான பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி சாதனங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்யலாமென்பதுடன், நிறுவகத்தைத் திறமையாக நடாத்துவதற்கான சாதனம், நிதியங்கள், ஆளணி, வேறேதேனும் உதவிகள் முதலியவற்றையும் பெற்றுக்கொள்ளலாம் ;

(ஈ) உடுதுணித் தொழிலின் எல்லா அம்சங்களிலும் கற்கைநெறிகளை நடாத்தலாம், அவற்றிற்கு உதவிசெய்யலாம், அவற்றை ஒன்றிணைக்கலாம், அத்துடன் ஊக்குவிக்கலாம் ;

(உ) நிறுவகத்தால் அளிக்கப்படும் ஏதேனும் பயிற்சிக்காகவும் சேவைகளுக்காகவும் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடலாம் ;

(ஊ) அதன் ஊழியர்களுக்கு நலன்புரி வசதிகளையும் பொழுதுபோக்கு வசதிகளையும் ஏற்பாடுசெய்யலாம் ;

(எ) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம் சம்பந்தமாக விதிகளை ஆக்கலாம் ;

(எ) அதன் தொழிலைத் திறம்படக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமானவையென ஆளுநர் சபை கருதக்கூடியன வான அத்தகைய பணிகளை, எவரேனும் உறுப்பின ருக்கு, நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அல்லது எவ ரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம் ;

(ஐ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு ஆளுநர் சபையின் அபிப்பிராயப்படி அவசியமான உடுதுணித் தொழில் சம்பந்தமாக புலனாய்வுகளைக்கொண்டுநடாத்தி தரவுகளைப் பதிந்துகொள்ளும் நோக்கத்திற்காகவும், புத்த கங்களையும், ஆவணங்களையும் சோதனைசெய்யும் நோக் கத்துக்காகவும் அவற்றின் பிரதிகளின் பிரித்தெடுத்த பகுதிகளை எடுக்கும் நோக்கத்துக்காகவும் ஏதேனும், காணியுள் அல்லது வளவுகளுள் செல்லலாம் ; அத்துடன்

(ஒ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு ஆளுநர் சபை யின் அபிப்பிராயப்படி தேவையானவை அல்லது உகந் தவை அல்லது இடைநேர்விளைவானவை ஆன அத்த கைய வேறு எல்லா விடயங்களையும் செய்யலாம்.

நிறுவகம் அதன் தத்துவங்களை அமைச்சரின் பணிப்புகளின்கீழ் பிரயோகித்தல்.

5. நிறுவகமானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கை யிலும், அதன் கடமைகளைப் புரிகையிலும், உடுதுணித் தொழில் தொடர்பான அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளுக்கும், அத்த கைய கொள்கை தொடர்பாக அமைச்சரால் வழங்கப்படும் எவை யேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கும் இணங் கியொழுகுதல் வேண்டும்.

ஆளுநர் சபையின் அமைப்பு.

6. நிறுவகமானது, அமைச்சரால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஆட்களைக்கொண்ட ஆளுநர் சபையொன்றை (இது, இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கொண்டிருத்தல் வேண்டும்--

(அ) (i) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்; அல்லது

(ii) அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்த வேறெவரேனும் அலுவலர்,

இவரே சபையின் தவிசாளராதல் வேண்டும்.

(ஆ) தேசிய தொழிற்பயிற்சி என்னும் விடயத்துக்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்த அத்தகைய அமைச்சரால் நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்;

(இ) உயர் கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச் சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அத்தகைய அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்த அலுவலரொருவர்;

(ஈ) ஆடை ஏற்றுமதியாளர் கழகத்தைச் சேர்ந்த பிரதிநிதி யொருவர்;

(உ) ஆடை உற்பத்தியாளர் கழகத்தைச் சேர்ந்த பிரதிநிதி யொருவர்;

(ஊ) பின்னப்பட்ட உடையுற்பத்தியாளர் கழகத்தின் பிரதிநிதி யொருவர்;

(எ) புடைவைத்தொழில் நிறுவகத்தின் (இலங்கைப் பிரிவு) தலைவர்; அத்துடன்

(ஏ) வேறு இரு உறுப்பினர்கள்; இவர்களில் ஒருவர் கைதத நித்தொழிலிலிருத்தல் வேண்டும்.

உறுப்பாண்மைக்குத் தகைமையீனம்.

7. ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது உறுப்பினராக வந்தால்;

(ஆ) நிறுவகத்தால் அல்லது அதன் சார்பாகச் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் நேரடியாக அல்லது மறை முகமாக ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தால் ; அல்லது

(இ) சபையின் உறுப்பினர் என்ற முறையில் அவரது பணிகளே, அவர் நிறைவேற்றுவதைப் பங்கமானமுறையில் பாதிக்கும் சாத்தியமுள்ள அத்தகைய ஏதேனும் நிதிசார் அக்கறையை அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்,

அவர், சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

8. ஆறும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் இறப்பதன் காரணமாக, அல்லது பதவி துறப்பதன் காரணமாக, அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் காரணமாக முன்னரே பதவியை வறிதாக்கினுலொழிய, மூன்றாண்டுக் காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் இறப்பு, பதவி துறப்பு, பதவி அகற்றுகை.

9. (1) சபையின் உறுப்பினர் எவரும், எப்போதேனும், அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு, அப்பயன்பட எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(2) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினுல் அதற்கான காரணம் எதுவும் காட்டாமல், எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்; அத்தகைய அகற்றுகை, நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறு யினும் உறுப்பினர் எவரும், எந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாரோ, அந்த அமைச்சரின் அல்லது அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் அன்றி, இவ்வுட் பிரிவின்கீழ் அகற்றப்படுதலாகாது.

(3) சபையின் உறுப்பினர் எவரும் இறந்தால், அல்லது பதவியை வறிதாக்கினுல், அல்லது முற்போந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டால், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட அதே

முறையில் வேறோர் ஆளை அமைச்சர் நியமிக்கலாம். அத்தகைய ஓர் உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆளெவரும், அவர் எந்த உறுப்பினரைத் தொடர்ந்து பதவிக்கு வந்தாரோ, அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியிருக்கும் பாகத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) சபையின் உறுப்பினர் எவரும், ஏதேனும் காலத்தின் போது, சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறேதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராயிருப்பின் அத்தகைய காலத்தின்போது பதிற் கடமையாற்றுவதற்காக, 6ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட அதே முறையில் வேறெவரேனும் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்.

(5) தவிசாளரானவர், அமைச்சரின் அமைச்சின் செயலாளராக இருக்குமிடத்து, தவிசாளருக்கும், 6 ஆம் பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினருக்கும் இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

10. சபையின் செயல் அல்லது முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது. வெற்றிடமொன்று இருப்பதன்காரணமாகச் செயல்கள் வலிதற்றதாக்கப்படுதலாகாது.

11. சபையின் உறுப்பினர்களுக்கு நிறுவகத்தின் நிதியத்திலிருந்து, அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம். சபையின் உறுப்பினர்களின் ஊதியம்.

12. இச்சட்டத்தின்கீழ், சபையின் கூட்டங்கள், அதற்கான கூட்ட நடப்பெண், அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைகள் என்பன தொடர்பாக விதிகள் ஆக்கப்படலாம். சபையின் கூட்டங்கள்.

13. (1) சபையானது, தவிசாளருக்கு, அல்லது சபையின் வேறெவரேனும் உறுப்பினருக்கு, அல்லது நிறுவகத்தின் பணிப்பாளருக்கு, அல்லது நிறுவகத்தின் எவரேனும் ஊழியருக்கு, அதன் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் எவற்றையும் கையளிக்கலாம். தத்துவங்கள், பணிகள், அல்லது கடமைகளைக் கையளித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையின் எவையேனும் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் கையளிக்கப்பட்ட தவிசாளர், வேறு உறுப்பினர், பணிப்பாளர், அல்லது ஊழியர் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளை சபையின் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புரைகளுக்கமைவாகப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும்.

*சபையின் துணைத் தவிசாளர்.*

14. (1) அமைச்சரானவர், தவிசாளருடனான கலந்தாலோசனையுடன், 6 ஆம் பிரிவின்கீழ் அவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து துணைத் தவிசாளரொருவரை நியமிக்கலாம்.

(2) தவிசாளர் அல்லது துணைத் தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது உடற்பலவீனம் காரணமாக, அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, தற்காலிகமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதவராயிருப்பின், அமைச்சர் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென ஏனைய உறுப்பினர்களிடையேயிருந்து ஒருவரை நியமிக்கலாம்.

(3) தவிசாளர், அல்லது அவர் சமுகமளிக்காதவிடத்து துணைத் தவிசாளர், சபையின் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்; தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகிய இருவரும் வருகைதராதிருப்பின், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சபையின் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) சபையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படவேண்டிய ஏதேனும் கருமம்மீது வாக்குகள் சமமாக இருக்கின்றவிடத்து, அத்தகைய கூட்டத்தில், தவிசாளர், தமது வாக்குக்கு மேலதிகமாக இரண்டாவது வாக்கொன்றை அல்லது அறுதியிடும் வாக்கை உடையவராயிருத்தல் வேண்டும்.

*நிறுவகத்தின் அலுவல்களைச் சபை நிருவகித்தல்வேண்டும்.*

15. சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகித்தல் வேண்டும் ; அது, நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன் அதன் கடமைகளையும் புரியலாம்.

## பாகம் II

## நிறுவகத்தின் பணிப்பாளரையும் பணியாட்டொகுதியையும் நியமித்தல்

*நிறுவகத்தின் பணிப்பாளர்.*

16. (1) அமைச்சரானவர், சபையின் தவிசாளருடனான கலந்தாலோசனையுடன், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குப் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்; இவரே பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும். பணிப்பாளரின் ஊதியம் உட்பட தொழில் நிபந்தனைகள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர், அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும், பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

(3) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுகையானது நீதிமன்றம் எதிலும் கேள்விக்கு உட்படுத்தப்படுதலும் ஆகாது.

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பாகச் சபைக்குள்ள தத்துவங்கள்.

17. (1) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது—

(அ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், பதவியிலிருந்து அகற்றலாம், அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக்கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம்;

(ஆ) பணியாட்டொகுதியினரின் கூலிகள், சம்பளங்கள், அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நன்மைக்காகச் சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு, அல்லது திட்டத்திற்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும், அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பாக விதிகள் ஆக்கப்படலாம்.

நிறுவகத்தின் பணியாட் தொகுதிக்கு பகிரங்க அலுவலர்களையும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் சேவையாளர்களையும் நியமித்தல்.

18. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்தோடு, அதேபோன்ற சம்மதத்தோடு சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்கசேவையிலுள்ள எவரேனும் அலுவலர், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்ற உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ள எவரேனும் ஆளை நிறுவகம் வேலைக்கமர்த்துமிடத்து, அந் நிறுவகத்துக்கான அந்த ஆளின் சேவைக்காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்கு அவரால் ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

4—ஏ 073871 (11/83)

(5) சபையின் வேண்டுகோளின்பேரில் உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் வேறெவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்துக்கேற்றவாறு அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்தோடும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்தோடும் அந்த நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு, சபையினால் அதே போன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது சபையும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையும் அல்லது அந்த உள்ளூரதிகார சபை உடன்பட்டுக் கொள்ளக்கூடிய ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாய நிதிய உரிமைகள் உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும், அத்துடன் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையினதும் சம்மதத்தோடு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு, சபையினால் அதே போன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியனவான ஓய்வூதிய உரிமைகளும் சகாய நிதிய உரிமைகளும் உட்பட, அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) எவரேனும் ஆள் (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப்போன்ற அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

**நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.**

19. நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிறுவகமானது ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.**

20. நிறுவகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

## பாகம் III

## நிதி

**21.** (1) நிறுவகத்தின் தொடக்க மூலதனம் பன்னிரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாவாதல் வேண்டும் என்பதுடன், நிதி என்னும் விடயத்துக்குப்பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாருன அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அரசாங்கத்திஞல் நிறுவகத்திற்குக் கிடைக் கத்தக்கதாகச் செய்யப்படுதலும் வேண்டும். நிறுவகத்தின் மூலதனம்.

(2) அமைச்சரின் வேண்டுகோளின்பேரில் ஏதேனும் ஒதுக்கீட்டுச் சட்டத்திஞல், அல்லது பாராளுமன்றத்தின் தீர்மானத்திஞல், அதிகாரமளிக்கப்படக்கூடியவாருன அத்தகைய தொகையால் காலத்துக்குக்காலம் நிறுவகத்தின் மூலதனம் அதி கரிக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய தொகையானது நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக் கப்படக்கூடியவாருன அத்தகைய நியதி நிபந்தனைகள்மீது மானி யக்கொடையாக அல்லது கடஞக அரசாங்கத்தால் நிறுவகத்திற்குச் செலுத்தப்படுதலும் அல்லது கிடைக்கத்தக்கதாகச் செய்யப்படுத லும் வேண்டும்.

**22.** (1) நிறுவகம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். நிறுவகத்தின் நிதியம்.

(2) நிறுவகத்தால் —

(அ) இச்சட்டத்திஞல் அல்லது இதன்கீழ் அத்தகைய நிதியத் திற்குச் செலுத்தப்படத் தேவைப்படுத்தப்பட்ட கொடுப்ப னவுகள் ;

(ஆ) பயிலுநரிடமிருந்து பதிவுசெய்தலின்மீது சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் ;

(இ) நிறுவகத்தால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக அல்லது ஏற்பாடுசெய்யப்பட்ட பயிற்சிக்காக அறவிடப்பட்ட கட்டணங் கள் ; அத்துடன்

(ஈ) நன்கொடைகள்,

வழியாக பெற்றுக்கொள்ளப்படக்கூடியதான அத்தகைய எல்லாத் தொகைகளும் இந்நிதியத்துக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) நிறுவகம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணி களையும் பிரயோகிப்பதிலும், புரிதலிலும், நிறைவேற்றுவதிலும் அதஞல் உறப்பட்ட செலவினம் எதனையும் கொடுத்துத் தீர்ப்பதற் குத் தேவைப்படுவதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**23.** நிறுவகத்தின் நிதி ஆண்டு, பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும். நிதி ஆண்டு.

**24.** (1) நிறுவகத்தின் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப் புக்கள், அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய உரிய கணக்குப் புத்தகங்களைச் சபை வைத்திருக்கச் செய் வித்தல் வேண்டும். கணக்குகளின் கணக்காய்வு.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

## பொது

காணி கொள்ளற் சட்டத்தின் கீழ் நிறுவகத்திற்காக அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல்.

**25.** (1) நிறுவகத்தின் ஏதேனும் நோக்கத்திற்கென அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படத் தேவைப்படுகின்றவிடத்தும் அத்துடன் அமைச்சர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரிக்குமிடத்தும் எந்த நோக்கத்திற்காகக் காணி தேவைப்பட்டதோ அந்த நோக்கம் ஒரு பொது நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க காணி கொள்ளற் சட்டத்தின் கீழ் கொள்ளப்படலாம் என்பதுடன் நிறுவகத்திற்குக் கைமாற்றவும் படலாம்.

(2) நிறுவகத்திற்காக காணி கொள்ளற் சட்டத்தின் கீழான ஏதேனும் அசைவற்ற ஆதனக் கொள்ளலுக்கெனச் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் தொகை, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற அரச ஆதனங்கள் நிறுவகத்துக்குக் கிடைக்கக்கூடியனவாதல்.

**26.** (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் நிறுவகத்தின் நோக்கத்திற்கென தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பொன்று அல்லது குத்தகையொன்று எந்நோக்கத்துக்காகச் செய்யப்படக் கூடுமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் நிறுவகத்துக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பொன்றுக்கு அல்லது குத்தகையொன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் எதுவும் நிறுவகத்தின் நோக்கத்திற்கெனத் தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சர், அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்ற அமைச்சரின் ஒருப்பாட்டுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவகத்திற்குக் கைமாற்றி உரித்தாக்கலாம்.

நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென அரசாங்கம் வளவுகள் முதலியவற்றை கிடைக்கக்கூடியனவாக்குதல்.

**27.** நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென அவசியமெனக் கருதப் படக்கூடியவாறான அத்தகைய காணி, கட்டிடங்கள், அத்துடன் வேறு வசதிகளை அரசாங்கம் ஏற்பாடுசெய்யலாம்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது எடுக்கப்படும் செயலிலிருந்து பாதுகாப்பு.

**28.** (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும்—

(அ) இச்சட்டத்தின் கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சபைக்கு எதிராக ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது சபையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது நிறுவகத்தின் எவரேனும் ஊழியரால் அல்லது சபையின் மூலமாக நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, அவருக்கு எதிராக,

அமைதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னராக அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட செலவுகள் எவையும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்டதென நீதிமன்றம் கொள்ளுமாயின் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர் ஒருவரின் உடலுக்கு அல்லது ஆதனத்துக்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

**29.** நிறுவகத்திற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் சபையின் எவரேனும் உறுப்பினரின் உடலுக்கெதிராகவோ அல்லது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

சபைக்கு அல்லது சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அதன் அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் எவரேனும் ஊழியருக்கு ஏதேனும் காணியுள் அல்லது வளவுகளுள் புகுவதற்கான தத்துவம்.

**30.** சபையானது நிறுவகதின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமெனக் கருதினால் சபையின் எவரேனும் உறுப்பினரை அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலரை அல்லது ஊழியரை ஏதேனும் காணிக்குள் அல்லது வளவுச்குள் அல்லது காணிமீது அல்லது வளவுமீது பார்வையிடுவதற்காகவும் புலனாய்வுக்காகவும் அத்துடன் தரவுகளைப் பதிவுசெய்வதற்காகவும் உட்புக அதிகாரமளித்தல் சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

சபையை அல்லது எவரேனும் உறுப்பினரை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஊழியரைத் தடைசெய்யும் அல்லது முட்டுக்கட்டையிடும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாகுதல்.

**31.** சபையை அல்லது சபையின் எவரேனும் உறுப்பினரை அல்லது சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அல்லது ஊழியரை 30 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய புலனாய்வை அல்லது பார்வையிடலை அல்லது தரவு பதிவு செய்தலை நடாத்துகையில் எந்த ஆள் தடை செய்கின்றாரோ அல்லது முட்டுக்கட்டையாக இருக்கின்றாரோ அந்த ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தகவலைப் பெற்றுக்கொள்வதற்கான தத்துவம்.

**32.** (1) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பவற்றுள் எதனையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக சபையின் தவிசாளர், உறுப்பினரொருவர் நிறுவகத்தின் பணிப்பாளர், அல்லது அதற்கெனச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஊழியர், எழுத்திலான அறிவிப்புமூலம், எவரேனும் ஆளை, அறிவிப்பில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள், அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(2) எந்த ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் அறிவிப்புமூலம், ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஆளெவரும், ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தகவலை வெளிப்படுத்துவதினின்று அத்தகைய ஆள் விலக்கப்பட்டுள்ளவிடத்துத் தவிர அறிவிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகவேண்டியது அவரது கடமையாதல் வேண்டும்.

(3) நியாயமான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது எந்த ஆள் அத்தகைய தகவல் பொய்யானது எனத் தெரிந்துகொண்டு தகவல் கொடுத்துதவுகின்றாரோ அந்த ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) தவிசாளர், அல்லது சபையின் உறுப்பினரொருவர் அல்லது நிறுவகத்தின் பணிப்பாளர், அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலர், அல்லது ஊழியர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் தகவலை, ஏதேனும் சட்டநீதிமன்றத்தினால் அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டால், அல்லது நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காகத் தவிர, எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துதலோ அல்லது ஏதேனும் தகவலைப் பயன்படுத்துதலோ ஆகாது.

தவறுகளுக்கான தண்டம்.

**33.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் ஆளொவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

சபைக்கு சிறப்பானவையும் பொதுவானவையுமான பணிப்புகளைக் கொடுப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

**34.** சபையின் கடமைகளைப் புரிதலும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் குறித்து, அமைச்சர் எழுத்திலான சிறப்பான பணிப்புகளை அல்லது பொதுவான பணிப்புகளை விடுக்கலாம் என்பதுடன், சபை அத்தகைய பணிப்புகளுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும்.

35. (1) இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பாக விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது அவற்றுள் ஏதேனுங் கருமம் தொடர்பாக சபை விதிகளை ஆக்கலாம். விதிகளை ஆக்குவதற்குச் சபைக்குள்ள தத்துவம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட விதியொன்று அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதலாகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டு அலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.